சுருக்கம்

பொதுப்பணிகள்— விருதுநகர் மாவட்ட நிலஅளவைப்பதிவேடுகள் துறை— திருமதி.சு.உமாமகேஸ்வரி, த/பெ காலஞ்சென்ற திரு.கே.சுந்தர்ராஜன்— கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது— பணியை வரன்முறை செய்தல்— ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
பணிகள் அலகு, பணி9(2) பிரிவு

அரசாணை (3டி) எண்:56

நாள்: 05.05.2022
திருவள்ளுவராண்டு 2053
சுபகிருது வருடம், சித்திரை—22

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020
2. நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரின் கடித எண். ந.க.ர1/23267/2018 (நி.அ), நாள் 11.01.2021.

******

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரின் கடிதத்தில், விருதுநகர் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறையில் வரைவாளராகப் பணியாற்றி பணியிடையே 18.07.2006 அன்று காலஞ்சென்ற திரு.கே.சுந்தர்ராஜன் என்பவரின் மனைவி திருமதி.மாரியம்மாள் என்பவர் தனது மகள் திருமதி.சு.உமாமகேஸ்வரி என்பவருக்கு பணிநியமனம் கோரி மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பித்துள்ளார் என்றும், திருமதி.சு.உமாமகேஸ்வரி என்பவர் தனக்கு பணிநியமனம் வழங்கும் பட்சத்தில் தனது பெற்றோரின் குடும்பத்திற்கு உதவி புரிவதாக உறுதி ஆவணம் வழங்கியுள்ளார் என்றும், மேலும், அவரது கணவர், திரு.டி.மணிகண்டன் என்பவர் எதிர்காலத்தில் மனுதாரரின் குடும்பத்தை கடைசி வரையில் காப்பாற்றுவேன் என்று உறுதிமொழியினையும் பெற்று முன் வைத்துள்ளார் என்றும், தனியர் 10ஆம் வகுப்பு தேர்ச்சி (மார்ச் 2007) பெற்றுள்ளார் என்றும், காலஞ்சென்ற அரசுப்பணியாளரின் குடும்ப வறுமை நிலையினைக் கருத்தில்கொண்டு தனியருக்கு இளநிலை உதவியாளராக விருதுநகர் மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் வழங்கியுள்ளார் என்றும், திருமதி.சு.உமாமகேஸ்வரி என்பவர் அரசாணை (நிலை) எண்.78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 21.04.2017—ன்படி திருமணமான பெண் வாரிசுதாரர் என்ற நிலையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15 மற்றும் அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் பெற ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28(2) ஆகியவற்றை தளர்வு செய்தும், இளநிலை உதவியாளர் திருமதி சு.உமாமகேஸ்வரி என்பவருக்கு அவர் பணியேற்ற நாளான 01.11.2017 முற்பகல் முதல் தனியரின் பணியை இளநிலை உதவியாளர் இனத்தில் வரன்முறைப்படுத்தி அரசாணை பெற்று வழங்குமாறு அரசிற்கு பரிந்துரைத்துள்ளார்.

// த.பி.பா //

விருதுநகர் மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிஅ)அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: திரு.ஆ.பொன்னழகு பி.காம்.,

ந.க. அ1 / 5743 /2020 நாள்: 25.05.2022

பொருள்: பொதுப்பணி- நிலஅளவை பதிவேடுகள் துறை விருதுநகர் மாவட்டம்- கருணை அடிப்படை பணி நியமனம் காலஞ்சென்ற அரசுப்பணியாளர் (வரைவாளர்) (லேட்).கே.சுந்தரராஜன் என்பவரின் மகள் திருமதி.சு.உமா மகேஸ்வரி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக 01.11.2017-ல்பணி நியமனம் வழங்கப்பட்டது -பணிவரன்முறை செய்து அரசாணை வரப்பெற்றது — நபருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை: அரசாணை (3டி) எண்:56 வருவாய்(ம)பேரிடர் மேலாண்மை துறை பணிகள் அலகு பணி 9(2) பிரிவு நாள்: 05.05.2022

-----

**ஆணை:**

விருதுநகர் மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வரைவாளராக பணிபுரிந்து 18.07.2006-ல் பணியிடை மரணமடைந்த வரைவாளர் (லேட்).கே.சுந்தரராஜன் என்பவரின் மகள் திருமதி.சு.உமாமகேஸ்வரி என்பவருக்கு கருணை அடிப்படையில் விருதுநகர் மாவட்ட உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து நபர் 01.11.2017 முற்பகல் இளநிலை உதவியாளராகப் பணியேற்றுள்ளார்

பார்வையிற் கண்ட அரசாணையின்படி இளநிலை உதவியாளர் திருமதி.சு.உமாமகேஸ்வரி என்பவருக்கு இளநிலை உதவியாளர் இனத்தில் 01.11.2017முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி நபருக்கு இளநிலை உதவியாளர் இனத்தில் 01.11.2017முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

25/5

உதவிஇயக்குநர்
நில அளவை பதிவேடுகள் துறை
விருதுநகர்

25.5.22 25.5.2022

பெறுநர்

திருமதி.சு.உமாமகேஸ்வரி
இளநிலை உதவியாளர்
மாவட்ட நில அளவை அலுவலகம்
விருதுநகர்
(கண்காணிப்பாளர் நில அளவை விருதுநகர் மூலமாக)

நகல்: கண்காணிப்பாளர் நில அளவை விருதுநகர்
(நபரிடம் சார்வு செய்து சார்வு நகல் சமர்ப்பிக்க)

நகல்:- அ2,அ3,அ4,அ5,அ6 - இருக்கைகளுக்கு-புதிய எண்ணில்

நகல்: உபரி-2